**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

**(கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு)**

**சமூகப்பணி இளமாணி விசேட பட்டப் பாடநெறிக்கான விண்ணங்கள் கோரல் -2025/2026 கல்வியாண்டு.**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஏ பந்தியின் கீழ் பட்டம் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமாகும். இது சமூகப்பணியில் தொழில்வாண்மையான கல்வியினை வழங்கும் இலங்கையிலுள்ள முன்னணி உயர்கல்வி நிறுவனமுமாகும். தற்போது இந்நிறுவனம் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் இயங்கி வருவதுடன் இந்நிறுவனத்தினால் வழங்கப்படும் முழு நேர நான்காண்டு சமூகப்பணி இளமாணி விசேட பட்டப் பாடநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்கான தகைமை:**

2022, 2023, மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் எந்தவொரு துறையிலும் தோற்றி பல்கலைக்கழக நுழைவிற்கான அடிப்படைத் தகைமை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழி மூலம் பட்டத்தினை பயிலுவதற்கு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை அல்லது பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பொது ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது (C) தரத்தினை பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

**பட்டப்பாடநெறி நடாத்தப்படும் மொழி:** சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்

**தெரிவு முறை:**

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், பாடநெறியினை பயிலுவதற்கு விண்ணப்பித்த மொழிமூலம் நடாத்தப்படுகின்ற எழுத்து மூல தேர்வுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். எழுத்துமூல பரீட்சையில தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவதோடு மேற்குறித்த எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்காணல் திறன்களின் அடிப்படையில் தேர்வுசெய்யப்படுவர். எழுத்துமூல தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கோரப்படும் இறுதி நாளின் பின்னர் கொழும்பு அல்லது மாகாண மட்டத்தில் பரீட்சை நடாத்தப்படும். தேர்வுப் பரீட்சைக்கு பொது அறிவு மற்றும் பொது உளச்சார்பு வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். பாடநெறி நுழைவுப் பரீட்சைக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000/- அறவிடப்படும்.

**பாடநெறிக் கட்டணம்:** இந்த நான்காண்டு முழுநேர பட்டப்பபாடநெறியானது இலவசமாக நடாத்தப்படுவதுடன் பதிவுக் கட்டணமாக ரூ.35,000/- அறவிடப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:** தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.nisd.ac.lk) விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்யபட்டு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உறுத்தப்படுத்தப்பட் அனைத்து சான்றிதல்களுடனும்` "பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், லியனகே மூல்ல, சீதுவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி: 2025, செப்ரம்பர் மாதம் 22ம் திகதி**

விண்ணப்பக் கட்டணம்: விண்ணப்பக் கட்டணமாக ரூபா 500/- கீழ் தரப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு அப் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் கட்டணங்கள் செலுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கணக்கின் பெயர்:** பணிப்பாளர் நாயகம்,

**கணக்கு இலக்கம்:-** 143-1001-2-3298037 (மக்கள் வங்கி சுதுவல கிளை)

பதிவாளர்
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
லியனகேமுல்லை
சீதுவை
Tel: 0112882506
Email: registrar@nisd.ac.lk